போவதைத் தடுக்கவும், காஞ்சிபுரம் மாவட்டம், திருப்போரூர் தொகுதி வழியாகச் செல்லும் பாலாற்றின் குறுக்கே, குறிப்பாக ஆத்தூர், திம்மாவரம், பாலூர், வில்லியம்பாக்கம் போன்ற பகுதிகளில் தடுப்பணை—check dam—அமைத்து, மக்களின் நீண்ட நாள் கோரிக்கையை அமைச்சர் அவர்கள் நிறைவேற்றித் தருவார்களா? மேலும், அமைச்சர் அவர்கள் பொறுப்பேற்று இரண்டு ஆண்டுகள் ஓடிவிட்டன. அதேபோன்று, பாலாற்றின் வழியாக வீணாகச் செல்லும் மழை நீரைத் தடுக்க இந்த முறையாவது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா? மேலும், பாலாற்றிலிருந்துதான் காஞ்சிபுரம் மாவட்டத்தில் பல ஊராட்சிகள், பேரூராட்சிகள், நகராட்சிகள், தாம்பரம், MEPZ போன்ற பகுதிகளுக்கும் தண்ணீர் எடுத்துக்கொண்டிருக்கிறோம். நிலத்தடி நீர் அதிகரிக்க உடனடியாகத் தடுப்பணை அமைக்க அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதையும், எப்போது பணி நடைபெறும் என்பதையும் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், check dam கட்டுவதைப்பற்றியெல்லாம் கேட்டார். அதற்கு, பின்னால் பதில் சொல்கிறேன். முதலில் அவர் ஒரு விளக்கத்தைச் சொல்ல வேண்டும். ஏதோ, மணல் கொள்ளை நடப்பதாகக் கேள்வி நேரத்திலே சொல்லியிருக்கிறார். அது என்ன கொள்ளை என்பதை விவரிக்கட்டும். யார், யார் எப்படிக் கொள்ளையடிக்கிறார்கள் என்பதை நானும் சொல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 215, மாண்புமிகு உறுப்பினர் திரு. அருள் அன்பரசு, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

215—

பேருந்து வசதி

***29829—திரு. அருள் அன்பரசு:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2008 மே 7]

வேலூர் மாவட்டம், காவேரிப்பாக்கத்திலிருந்து சென்னைக்கும், சென்னையிலிருந்து காவேரிப்பாக்கத்திற்கும் புதிய பேருந்து இயக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சென்னையிலிருந்து காவேரிப்பாக்கம் வழியாக, வேலூர், குடியாத்தம், பேரணாம்பட்டு, ஆம்பூர், திருப்பத்தூர், ஆற்காடு, ஆலங்காயம் மற்றும் சித்தூர் ஆகிய இடங்களுக்கு 8 நிமிட இடைவெளியிலும், அதேபோல, காவேரிப்பாக்கம் வழியாக சென்னைக்கு 8 நிமிட இடைவெளியிலும் பேருந்துகள் தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகத்தினால் இயக்கப்பட்டு வருகின்றன. இவையே காவேரிப்பாக்கத்திலிருந்து பயணம் செய்யும் பயணிகளுக்குப் போதுமானவையாக உள்ளன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அருள் அன்பரசு.

திரு. அருள் அன்பரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவேரிப்பாக்கத்திலிருந்து சென்னைக்கு நேரடியாகப் பேருந்து வசதி கேட்டிருந்தேன். கடந்த 10 ஆண்டுகளுக்கும் மேலாக அங்கிருந்து சென்னைக்கு நேரடியாகப் போக்குவரத்து வசதியில்லை. ஆகவே, அரசின் சார்பாக ஏற்பாடு செய்து கொடுத்தால், சோளிங்கர் தொகுதி மக்கள் மட்டுமின்றி, பல்வேறு இடங்களில் பணிபுரிகின்ற மக்களும் பயனடைவார்கள். இந்தியா என்றாலே, முதல் பாரதப் பிரதமர் மரியாதைக்குரிய திரு. ஜவஹர்லால் நேரு அவர்கள் நினைவுக்கு வருவதைப்போல, தமிழகத்திலே போக்குவரத்துத் துறை அமைச்சர் என்று சொன்னாலே, மாண்புமிகு அமைச்சர் திரு. நேரு அவர்கள்தான் நினைவுக்கு வருவார்கள். அந்த அளவிற்குத் தன்னுடைய துறையிலே, திரு. நேரு என்றாலே நேராகச் செல்லக்கூடியவர் என்று பெயரெடுத்திருக்கின்ற போக்குவரத்துத் துறை அமைச்சர்—இன்னொன்றும் சொல்ல வேண்டும், பாரம்பரியமிக்க காங்கிரஸ் குடும்பத்தில் பிறந்த திரு. நேரு அவர்கள் திராவிட இயக்கத்தில் தீவிரமாக இருந்தாலும்—எங்கள் தொகுதி மக்களின்மேல் கருணை வைத்து, காவேரிப்பாக்கத்திலிருந்து சென்னைக்கு, குறைந்தபட்சம் ஒரு ஏ.சி. வால்வோ பஸ்ஸாவது ஏற்பாடு செய்து தரவேண்டும். அதற்கான நடவடிக்கை எடுக்கப்படுமா எனத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூர்-ஆற்காடு-முத்துக்கடை-காவேரிப்பாக்கம்-பூந்தமல்லி-கத்திப்பாரா-பாரிமுனை என்றும், வேலூர்-ஆற்காடு-முத்துக்கடை-காவேரிப்பாக்கம்-பூந்தமல்லி-கோயம்பேடு என்றும் இப்போது 8 நிமிட இடைவெளியில் பேருந்துகள் வந்து கொண்டிருக்கின்றன. மேலும், அந்தப் பகுதிகளில் வால்வோ பேருந்து இயக்குவதற்கான எந்த சாத்தியக்கூறும் இல்லை. சென்னை மாநகரில் பரிட்சார்த்தமாக இப்பொழுது 10 பேருந்துகள் விடப்பட்டிருக்கின்றன. இந்த ஆண்டு, சென்னை மாநகரில் 20 வால்வோ பேருந்துகள் விடப்படுகின்றன. வெளியூரிலிருந்து வால்வோ பேருந்து இயக்குவதற்கான எந்த சாத்தியக்கூறும் இல்லை. நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த ஆண்டும் 3,500 புதிய பேருந்துகள் வாங்கித் தந்திருக்கிறார்கள். எனவே, அங்கிருந்து நல்ல பேருந்துகளாக விடுவதற்கு இந்த அரசு முயற்சி எடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அருள் அன்பரசு.*

திரு. அருள் அன்பரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏ.சி. வால்வோ பஸ் இயக்க முடியாது என்று சொன்னாலும், புதிய பேருந்துகளையாவது உடனடியாக இயக்க வேண்டும். ஏனென்று சொன்னால், என்னுடைய தொகுதியிலே தனியார் பேருந்துகளை இயக்குகின்ற பலர் இருந்தாலும், குறித்த நேரத்தில் இயக்குவதில்லை. இதனால், அந்தப் பகுதி மக்கள் அவதிக்குள்ளாகின்றார்கள். எனவே, அரசின் சார்பாகக் குறித்த நேரத்திலே புதிய பேருந்து வழித்தடங்களை ஏற்பாடு செய்து தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உரிய நடவடிக்கை எடுப்பார்களா எனத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முன்பே சொல்லியிருக்கின்றேன். இப்பொழுது இன்னும் இரண்டு, மூன்று மாதங்களில் 3,500 புதிய பேருந்துகள்

2008 மே 7]

வரவிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அந்தப் பகுதிக்கு நிச்சயமாகப் புதிய பேருந்துகளாக மாற்றித் தரப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 216, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ராஜகுமார், மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள்.

216—

கட்டட வசதி

*25735—**திரு. எஸ். ராஜகுமார்:**

மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மயிலாடுதுறை வட்டாட்சியர் அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) பரிசீலனையில் இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ராஜகுமார்.

திரு. எஸ். ராஜகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலே நான் நீண்ட நாட்களாகக் கேட்டுக்கொண்டிருக்கின்றேன். இது, 100 ஆண்டுகளுக்கு மேலான மிகப் பழமையான கட்டடமாகும். அதே நேரத்திலே, போக்குவரத்துக்கு இடையூறான இடத்திலே அமைந்திருக்கின்றது. வட்டாட்சியர் அலுவலகத்திற்கு ஒரு சரியான இடத்திலே புதிய கட்டடம் கட்டுவதற்கு வருங்காலத்திலே அரசு நடவடிக்கை எடுக்குமா எனத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS